# அவுஸ்திரேலிய தமிழ் எழுத்தாளர் விழா










அவுஸ்திரேலியாவில் வருடம் தோறும் இடம்பெற்று வரும் தமிழ் எழுத்தாளர் விழா இந்த வருடமும் மிகவும் சிறப்பான முறையில் விழா அமைப்பாளர் லெ.முருகபூபதி தலைமையில் இடம்பெற்றன.

கடந்த மாதம் இடம்பெற்ற இந் நிகழ்வுக்கு அமெரிக்காவில் இருந்து வி.பேரம்பலம் லண்டனில் இருந்து இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியமும் இலங்கையில் இருந்து உடுவை எஸ்.தில்லைநடராசாவும் கலந்து கொண்டனர்.

இம்முறை இடம்பெற்ற இவ் விழாவில் இளம் தலைமுறையினரின் பங்களிப்பு பாராட்டக் கூடிய வகையில் அமைந்திருந்தது. இங்கு இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் இளம் தலைமுறையினர் கலந்து கொண்ட இவ் விழாவிற்கு ம.தனபாலசிங்கம் தலைமை தாங்குவதையும், இக் கருத்தரங்கில் பங்கு கொண்ட ''வருணன் பாலராஜ்'' செல்வி நிசேவிதா பாலசுப்பிரமணியம், தெ.நித்தியகீர்த்தி ஆகியோர் அமர்ந்திருப்பதையும் இக் கருத்தரங்குக்கு பார்வையாளர் வரிசையில் இளம் தலைமுறையினர் அமர்ந்திருப்பதையும் மற்றும் ''ஓவியர்'' ஞானம், இளைய பத்மநாதன், காவலூர் ராஜதுரை, சிசு நாகேந்திரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காண முடிகின்றது.

இவ்விழாவில் இடம்பெற்ற மற்றுமொரு நிகழ்வாக ''ஆவூரான்'' எழுதிய ''ஆத்மாவைத் தொலைத்தவர்கள்'' என்னும் சிறுகதை நூல் வெளியீட்டு விழா இடம்பெற்றது. இந் நூலின் பிரதியை ''இலக்கிய ஆர்வலர்'' சி.சற்குணலிங்கம் நூலின் ஆசிரியர் ''ஆவூரான்'' அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்வதையும் அருகில் பேராசிரியர் ஆ.சி.காந்தராஜா நிற்பதையும் காண முடிகின்றது.

இந்த எழுத்தாளர் விழாவில் பேராசிரியர் பொன் பூலோகசிங்கம் அவர்களும் இலங்கையில் ''குத்து விளக்கு'' என்ற திரைப்படத்தை தயாரித்த வி.எஸ்.துரைராஜா ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். அருகில் லெ.முருகபூபதி ஆ.சி.காந்தராஜா, நந்தகுமார், உடுவை தில்லைநடராசா ஆகியோர் நிற்பதையும் இங்கு காணமுடிகின்றது.

**தகவல் - க.தே.தாசன்**

# லண்டனில் நடைபெற்ற

## 'மகிழும் பூக்கள் 2008'



பழைய மாணவர்கள் சங்க ஐக்கிய இராச்சியக் கிளைத் தலைவர் த.சி வகுருநாதன் தலைமையுரையாற்று கிறார்

புலோலி புற்றளை மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சிய கிளையினர் வருடாந்தம் நடாத்தும்''மகிழம்பூக்கள்'' நிகழ்வின் இவ்வருடத்திற்கான விழா அண்மையில் மெடில்செக்ஸ் கிறீன்போல்ட் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிடைக்கும் நிதியானது தாயக பாடசாலையின் வளர்ச்சிக்காகவும் புற்றளை சனசமூக நிலையம் மற்றும் நூலக புனரமைப்பிற்காகவும் பாடசாலையில் பயிலும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்காகவும் பகிர்ந்தளிக்கப்படும் என ''மகிழம்பூக்கள் 2008'' நிகழ்விற்கு தலைமை தாங்கிய பழைய மாணவர்சங்க ஐக்கிய இராச்சியக் கிளையின் தலைவர் தம்பையா சிவகுருநாதன் தெரிவித்தார்.

தினக்குரல் அனுசரணையுடன் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்தும் கட்டுரைப்போட்டி வாயிலாகவும் அகில இலங்கை ரீதியில் மேலும் எட்டு மாணவர்கள் இந்நிதிமூலம் பயன்பெறும் வாய்ப்பும் உண்டு என்பதையும் சிவகுருநாதன் நிகழ்வில் சுட்டிக்காட்டினார்.

பாடசாலையின் பழைய மாண11 வியான திருமதி பாலன் பாடசாலைக் கீதத்தினை இசைத்து நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார். ''NATO கந்தசாமி'' சமூக நாடகத்தினைத் தொடர்ந்து இந்திய திரையிசைப் பாடகர்களான முகேஷ் , கல்பனா ஆகியோர் பங்குபற்றிய மெல்லிசைக் கச்சேரி பார்வையாளர்களுக்கு பெரும் விருந்தாக அமைந்தது.

நிகழ்ச்சிகளின் நிறைவாக ''வெல்ல முடிந்தால் வெல்லுங்கள்'' எனும் பார்வையாளர்களுக்கான போட்டி நிகழ்ச்சி ஒன்றும் நடைபெற்றது. நிகழ்ச்சிகளை உலக அறிவிப்பாளர் பி.எச்.அப்துல்ஹமீட் தொகுத்தளித்தார்.

கேளிக்கை நிகழ்ச்சியாக அன்றி கலைசார் மற்றும் அறிவுத் தேடலுக்குமான ஒரு நிகழ்வாக ''மகிழம்பூக்கள்'' வருடாந்த நிகழ்வினை வடிவமைத்திருக்கின்ற புலோலி புற்றளை மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சியக் கிளையினரை எத்துணை பாராட்டினாலும் தகும்.

### புற்றளை மகாவித்தியாலய பழைய மாணவர்கள் (UK) வருடாந்த நிகழ்வு



**பி.எச்.அப்துல் ஹமீட் தொகுத்து வழங்கும் ''வெல்ல முடிந்தால் வெல்லுங்கள்'' பார்வையாளருக்கான போட்டி நிகழ்ச்சி**



**திருமதி பாலன் பாடசாலைக் கீதம் இசைக்கின்றார்**



**இந்தியத் திரைப்பட பாடகர்கள் முகேஷ், கல்பனா கலந்து கொள்ளும் மெல்லிசைக் கச்சேரி.**












**புற்றளை மகாவித்தியாலய பழைய மாணவ/ மாணவிகளின் புதல்விகள் பங்குகொள்ளும் நாட்டிய நிகழ்வு**



**''NATO கந்தசாமி'' நாடகத்தில் இருந்து ஒரு பகுதி**



**பார்வையாளர்களில் ஒரு பகுதி**

**வேலோன்**